09.03.2026

O.S.No. 42/2023

**PW1– ஷகிலா பீவி – க/பெ. செய்யது மசூது**

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.03.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. எனக்கு மலையாளம் தான் எழுதப்படிக்க தெரியும். நானும், இறந்துபோன செய்யதுமசூதுவும் திருமணம் செய்ததை காட்டக்கூடிய நிக்கா பதிவு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. எனக்கும், இறந்துபோன செய்யதுமசூதுவூக்கும் கொட்டாரக்கரையில் உள்ள தலச்சிரா முஸ்லீம் ஜமாத்தில் திருமணம் நடைபெற்றது. எனக்கு 2மகன்கன், அவர்கள்தான் 2,3 வாதிகள். 2ம் வாதியின் வயது 29, 3ம் வாதியின் வயது 26.

3. என்னை திருமணம் செய்வதற்கு முன்பே செய்யதுமசூது, மைதீன்பீவியை திருமணம் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த திருமணத்தின் பலனாக அவர்களுக்கு 2 பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

4. நான் இந்த வழக்கில் மேற்படி 3 நபர்களையும் சேர்க்காததால் அவசிய தரப்பினரை கட்சி சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் அவர்களை கட்சி சேர்க்க அணுகியபோது அவர்களது ஆதாரரை தர மறுத்துவிட்டார்கள்.

5. நான் 2ம் வாதியின் பிறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அதை தாக்கல் செய்ய தயாரக உள்ளேன்.

6. நான் 1ம் பிரதிவாதியை அணுகியபோது எனது கணவரின் முதல் மனைவியையும், அவரது வாரிசையும் கட்சி சேர்க்காததால் எனது மனு நிராகரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

7. எனது பிராதில் அவசியதரப்பினரை சேர்க்காததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தூய கரங்களுடன் பிராதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai